DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.422/2017**

**P.W.10**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | செல்வராஜ் |
| Father Name | : | ராஜு |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.09.2025.
( 1, 2, 5 மற்றும் 6 எதிரிகள் ஆஜர். 4 வது எதிரி ஆஜர் இல்லை. 4 வது எதிரி சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. A3 இறந்துவிட்டார்)

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>**

நான் தற்போது காவல்துறையில் சார்பு ஆய்வாளராக பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளேன். இந்த வழக்கு சமயம் சி1 திடீர் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த போது, 03.01.2016 தேதியில் மதியம் 14.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருக்கும் போது, மதுரை மாநகர் நுண்ணறிவு பிரிவில் பணிபுரியும் தலைமை காவலர் 308 **அ.சா.1** பாண்டிச்சாமி என்பவர் நிலையத்தில் எதிரிகளுடன் ஆஜராகி எதிரிகளுடனும் உடைந்த கேமராவுடனும் எழுத்துபூர்வமாக கொடுத்த **அ.சா.ஆ.1** புகார் மனுவை பெற்று சி1 திடீர் நகர் சட்டம் ஒழுங்கு காவல்நிலைய குற்ற எண்.7/2016 இ.த.ச பிரிவுகள் 147, 148, 294(b), 332, 336, 353, 506(ii) மற்றும் 3(1) of TNPPDL Act ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கின் தன்மையை கருதி மேல்விசாரணைக்காக முதல் தகவல் அறிக்கை மற்றும் வழக்கு கோப்பை காவல் ஆய்வாளர் விசாரணைக்கு வைத்தேன், முதல் தகவல் அறிக்கை மற்றும் ஆவணங்களையும் நீதித்துறை நடுவர் எண்.5 அவர்களுக்கும் மற்றும் அதன்

நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். என்னை காவல்ஆய்வாளர் விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–</u>**

முதல் தகவல் அறிக்கையில் காளம் 14ல் வாதியினுடைய கையொப்பம பெறப்படவில்லை என்றால் சரிதான். மேலும் முதல் தகவல் அறிக்கையில் 04.01.2016ம் தேதி மாலை 04.00மணிக்கு பெற்றதாக நீதித்துறை நடுவர் அவர்களால் ஒப்பம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எங்கள் காவல்நிலையத்திற்கும் நீதிமன்றத்திற்கும் இடையே உள்ள துாரத்தை 1/2 மணிநேரத்தில் சென்றுவிடலாம் என்றால் சரிதான். எங்கள் காவல்நிலையத்தில் இருந்து ரோட்டின் நடுவே நின்று பார்த்தால் இந்த வழக்கின் சம்பவ இடம் தெரியும் என்றால் சரிதான். **அ.சா.1** பாண்டிச்சாமி தெப்பக்குளம் போக்குவரத்து பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்தார். **அ.சா.1** பாண்டிச்சாமி நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் என்னிடம் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றும், ஐந்து நபர்களை என்னிடம் ஒப்படைத்ததாக நான் சொல்வது பொய் என்றும், உடைந்த கேமரா எதுவும் வாதி என்னிடம் ஒப்படைக்கவில்லை என்றும் இந்த வழக்கில் **அ.சா.ஆ.5** முதல் தகவல் அறிக்கை உயர்அதிகாரிகளின் ஆலோசனை படி பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை –</u>** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

**நான்காவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
மதுரை.